தமிழ் நாடு பேரிடர்
அபாயக் குறைப்பு முகமை
13 AUG 2020
சேப்பாக்கம், சென்னை–5.

**சுருக்கம்**

பேரிடர் மேலாண்மை –செங்கல்பட்டு மாவட்டம் -மதுராந்தகம் வட்டம் - ஜமீன் எண்டத்தூர் குறுவட்டம் - 178.பெருவேலி கிராமம் திருமதி.வைதேகி, க/பெ. மகேந்திரன் மற்றும் திருமதி. சசிகலா, க/பெ. ஸ்ரீதரன் ஆகிய இரு நபர்களும் 13.06.2019 அன்று இடிமின்னல் தாக்கி படுகாயமடைந்தது – ரூ.25,400/– மாநில பேரிடர் நிவாரண நிதியில் இருந்து இழப்பீடு வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பேரிடர் மேலாண்மை அலகு, பே.மே.2 பிரிவு**

**அரசாணை (நிலை) எண்.404** **நாள் 06.08.2020**

**சார்வரி, ஆடி 22,**
**திருவள்ளுவர் ஆண்டு 2051**

**படிக்கவும்:**

1. அரசாணை (நிலை) எண். 246, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, பேரிடர் மேலாண்மை பிரிவு பே.மே.3(2) பிரிவு, நாள் 03.08.2017.
2. செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியரின் கடிதம் எண். ந.க.எண். 39694/2019/பே.மே.1, நாள். 25.10.2019.
3. செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியரின் கடிதம் எண். ந.க.எண். 39696/2019/பே.மே.2, நாள். 25.10.2019.
4. முதன்மைச் செயலாளர்/ வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களிடமிருந்து பெறப்பட்ட கடிதம் எண்.இ.இ.1(1)/661/2020, நாள் 19.02.2020.

*******

**ஆணை:**

மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், முதன்மைச்செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர், செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம், ஜமீன் எண்டத்தூர் குறுவட்டம், 178.பெருவேலி கிராமம் என்ற முகவரியைச் சேர்ந்த திருமதி.வைதேகி, க/பெ. மகேந்திரன் மற்றும் திருமதி. சசிகலா, க/பெ. ஸ்ரீதரன் ஆகிய இரு நபர்களும் 13.06.2019 அன்று மாலை 4.45 மணியளவில் இடிமின்னல் தாக்கி படுகாயமடைந்ததற்கு மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து நிவாரண நிதி கோரி செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அறிக்கை செய்துள்ளார் என தெரிவித்துள்ளார். மேலும் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியரின் முன்மொழிவுகள் பரிசீலனை செய்யப்பட்டதில் மேற்காணும் இருவரையும் செங்கல்பட்டு அரசு பொது மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டதில் திருமதி.வைதேகி என்பவர் 13.06.2019 முதல் 20.06.2019 வரை, செங்கல்பட்டு அரசு பொது மருத்துவமனையிலும், பின்னர் 21.06.2019 முதல் 18.08.2019 வரை ஆஷா தனியார் மருத்துவமனையிலும் சிகிச்சை பெற்றுள்ளதாகவும் மற்றொரு நபரான திருமதி.சசிகலா, க/பெ.ஸ்ரீதரன் என்பவர் 13.06.2019 முதல் 17.06.2019 வரை, செங்கல்பட்டு அரசு பொது மருத்துவமனையிலும் பின்னர் 18.06.2019 முதல் 02.08.2019 வரை ஆஷா தனியார் மருத்துவமனையிலும் சிகிச்சை பெற்றுள்ளதாகவும் இருநபர்களின் மருத்துவ

//த.பி.பா.//

சான்றுகளின்மூலம் இடிதாக்கியதில் காயமுற்றது உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும். அரசாணை (நிலை) எண்.246, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் பே.மே.3(2) துறை, நாள். 03.08.2017-இன் படி இடிதாக்கி காயமடைந்து ஒருவாரத்திற்கு மேல் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற நபர்களுக்கு மாநில பேரிடர் நிவாரண நிதி தொகை ரூ.12,700/- வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

2. முதன்மைச்செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியரின் கோரிக்கையை ஏற்று செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம், ஜமீன் எண்டத்தூர் குறுவட்டம், 178.பெருவேலி கிராமம் திருமதி. வைதேகி, க/பெ. மகேந்திரன் மற்றும் திருமதி. சசிகலா, க/பெ. ஸ்ரீதரன் ஆகிய இரு நபர்களும் 13.06.2019 அன்று இடிமின்னல் தாக்கி படுகாயமடைந்ததால் நிவாரண நிதியாக தலா ரூ.12,700 வீதம் மொத்தம் ரூ.25,400/-(ரூபாய் இருபத்தி ஐந்தாயிரத்து நாநூறு மட்டும்) மாநில பேரிடர் நிவாரண நிதியாக வழங்க பரிந்துரை செய்துள்ளார்.

3. மேற்காணும் சூழ்நிலையில், மேலே இரண்டு மற்றும் மூன்றாவதாக படிக்கப்பட்ட செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியரின் கடிதங்களிலுள்ள கோரிக்கை மீது முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் பரிந்துரை மற்றும் மாநில செயலர் குழுவின் ஒப்புதல் அளித்ததன்படி செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம், ஜமீன் எண்டத்தூர் குறுவட்டம், 178.பெருவேலி கிராமம் திருமதி.வைதேகி, க/பெ. மகேந்திரன் மற்றும் திருமதி. சசிகலா, க/பெ.ஸ்ரீதரன் ஆகிய இரு நபர்களும் 13.06.2019 அன்று இடிமின்னல் தாக்கி படுகாயமடைந்ததால் நிவாரண நிதியாக தலா ரூ.12,700 வீதம் மொத்தம் ரூ.25,400/-(ரூபாய் இருபத்தி ஐந்தாயிரத்து நாநூறு மட்டும்) தொகையினை மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி–3ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

2245 இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு – 02 வெள்ளம், புயல் முதலியவை – 101 – கருணை உதவி – மாநில செலவினங்கள் – AE – வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரொக்க உதவித் தொகை அளித்தல் – 351 இழப்பீடு 02 ஏனைய இழப்பீடுகள் – அனுமதித்தது.
(Old DPC 2245 02101 AE 5128)
(IFHRMS DPC 2245 02101 AE 35102)

5. மேலே பத்தி–3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் 2020–2021 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு/ இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். அத்தகைய செலவினத்தை எதிர்நோக்கி, மேலே பத்தி–3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை பெற்று வழங்க முதன்மைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையருக்கு அதிகாரமளிக்கப்படுகிறது. மேலும், இச்செலவினத்தை திருத்த மதிப்பீடு/ இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கும் தனித்தனியாக கருத்துக்களை உரிய நேரத்தில் நிதி

//த.பி.பா.//

(வருவாய்) துறைக்கு அனுப்புமாறு முதன்மைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

6. இவ்வரசாணை நிதி (வருவாய்) துறையின் அ.சா.எண்.258, நாள் 03.08.2020–ல் பெறப்பட்ட இசைவுடனும், கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண்.298–இன்படியும் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

அதுல்ய மிஸ்ரா,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

**பெறுநர்**

முதன்மைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை–600 005.
இயக்குநர் (பேரிடர் மேலாண்மை) (பொறுப்பு), தமிழ்நாடு பேரிடர் அபாய தணிப்பு முகமை, சேப்பாக்கம், சென்னை–600 005.
மாவட்ட ஆட்சியர், செங்கல்பட்டு.
மாவட்ட கருவூல அலுவலர், செங்கல்பட்டு
முதன்மை கணக்காயர், சென்னை–600 018/600 035.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–600 008.

**நகல்**

கூடுதல் தலைமைச் செயலாளர், நிதித் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009.
கூடுதல் தலைமைச் செயலாளர், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009.
முதன்மைச் செயலாளர், நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009.
முதன்மைச் செயலாளர், பொதுப்பணித் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–600 009.
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை–600009.
தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச் செயலாளர், தலைமைச் செயலகம், சென்னை–600 009.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அவர்களின் முதன்மை தனிச் செயலாளர், தலைமைச் செயலகம், சென்னை–600 009.
நிதி (வருவாய் / வ.செ.–2/ வ.வ.மு.I) துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009.
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (அநமு–2) துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

06/08/2020
பிரிவு அலுவலர்